| | |
|---|---|
| திரு.தி.ஜனார்த்தனன், நகர்மன்ற தலைவர் | நகராட்சி அலுவலகம், புன்செய்ப் புளியம்பட்டி நாள்.26.12.2022 |

அன்புடையீர் வணக்கம்,

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் சாதாரண கூட்டம் **திருவள்ளுவர் ஆண்டு 2053 சிலை (மார்கழி) மாதம் 14ம் நாள்,** 2022-ம் ஆண்டு **டிசம்பர் மாதம் 29 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில்** நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. கூட்ட பொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் தாங்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்

(தி.ஜனார்த்தனன்)

**பொருள் எண்.1**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12ல், நம்பியூர் சாலையில் ஏற்கனவே குப்பைகள் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீர்நிலை பகுதியில் உள்ள குப்பைகளை (21824.00 க.மீ) உயிர் சுரங்கம் முறையில் (Bio Mining) அகற்றி அவ்விடத்தை நீர்நிலையாக மாற்றுதல் பணிக்காக ரூ.170.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.115, நாள்.19.07.2022ன் படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு விரிவான திட்ட மதிப்பீடு கீழ்கண்டவாறு தயார் செய்து முன்மொழிவு அனுப்பப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.12ல், நம்பியூர் சாலையில் ஏற்கனவே குப்பைகள் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீர்நிலை பகுதியில் உள்ள குப்பைகளை (21824.00 க.மீ) உயிர் சுரங்கம் முறையில் (Bio Mining) அகற்றி அவ்விடத்தை நீர்நிலையாக மாற்றுதல் பணி | 170.00 |

முன்மொழிவு அனுப்பப்பட்டதற்கினங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.19009/2022/SBM-1, நாள்.25.11.2022ன்படி நிர்வாக அனுமதியும், கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்காக திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | GoI 50% மானிய தொகை (ரூ இலட்சத்தில்) | GoTN 33% மானிய தொகை (ரூ இலட்சத்தில்) | நகராட்சியின் பங்களிப்பு தொகை 17% (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.12ல், நம்பியூர் சாலையில் ஏற்கனவே குப்பைகள் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீர்நிலை பகுதியில் உள்ள குப்பைகளை உயிர் சுரங்கம் முறையில் (Bio Mining) அகற்றி அவ்விடத்தை நீர்நிலையாக மாற்றுதல் பணி | 140.00 | 70.00 | 46.20 | 23.80 |

**(ந.க.எண்.1241/2022/இ1)**

**அலுவலகக் குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.2**

ஈரோடு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, மாவட்ட ஆட்சியரகம், ஈரோடு அவர்களின் கடித ந.க.எண்.15/அ/மா.கு.பா.அ/21 நாள்.16.11.2022–ல் கொரோனா பெருந்தொற்றால் இறந்தவர்களுக்கு 18 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகள் இருப்பின் அக்குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கொரோனா நிவாரணத்தொகை வழங்கிட ஏதுவாக சம்மந்தப்பட்ட பெற்றோரின் பெயர் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கான பட்டியல் (BPL பட்டியல்) இடம் பெற்றிருக்க வேண்டும். இந்நிலையில் இந்நகராட்சியின் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கான பட்டியலில் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிப் பகுதியினை சார்ந்த வார்டு எண்.02ல் திருமதி.சித்ரா க/பெ திரு.சரவணன்(லேட்) செங்குந்தபுரம் 2வது வீதி, புன்செய்ப் புளியம்பட்டி என்பவரின் பெயர் இடம் பெறாததால் இந்நகராட்சிக்கு பரிந்துரை செய்து அப்பெயரினை பட்டியலில் சேர்த்து அதன் விவரத்தை தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி குடும்பத்தின் தலைவர் திருமதி.சித்ரா என்பவராவார். அவரது கணவர் திரு.சரவணன் என்பவர் கோவிட்–19 ஆல் இறந்துவிட்டார். திருமதி.சித்ரா–க்கு கி.சு.சுபஸ்ரீ என்ற பெண் குழந்தை உள்ளார். எனவே சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் அரசாணை எண்.24/2021 நாள்.11.06.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின் படி இந்நகராட்சியின் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கான பட்டியலில் (BPL) திருமதி.சித்ரா க/பெ திரு.சரவணன்(லேட்) செங்குந்தபுரம் 2வது வீதி, புன்செய்ப் புளியம்பட்டி என்னும் பெயரை சேர்த்துக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1180/2022/எச்1)**

**அலுவலகக்குறிப்பு**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.3**

ஈரோடு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, மாவட்ட ஆட்சியரகம், ஈரோடு அவர்களின் கடித ந.க.எண்.15/அ/மா.கு.பா.அ/21 நாள்.16.11.2022–ல் கொரோனா பெருந்தொற்றால் இறந்தவர்களுக்கு 18 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகள் இருப்பின் அக்குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கொரோனா நிவாரணத்தொகை வழங்கிட ஏதுவாக சம்மந்தப்பட்ட பெற்றோரின் பெயர் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கான பட்டியல் (BPL பட்டியல்) இடம் பெற்றிருக்க வேண்டும். இந்நிலையில் இந்நகராட்சியின் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கான பட்டியலில் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிப் பகுதியினை சார்ந்த திருமதி.சபரிபிரியா க/பெ திரு.விவேகானந்தன் (லேட்) 1/1A தென்வடல் வீதி, புன்செய்ப் புளியம்பட்டி என்பவரின் பெயர் இடம் பெறாததால் இந்நகராட்சிக்கு பரிந்துரை செய்து அப்பெயரினை பட்டியலில் சேர்த்து அதன் விவரத்தை தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி குடும்பத்தின் தலைவர் திருமதி.சபரிபிரியா என்பவராவார். அவரது கணவர் திரு.விவேகானந்தன் என்பவர் கோவிட்–19 ஆல் இறந்துவிட்டார். திருமதி.சபரிபிரியா–க்கு வி.பிரத்யங்கரா என்ற பெண் குழந்தை உள்ளார். எனவே சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை

செயலாளர் அரசாணை எண்.24/2021 நாள்.11.06.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின் படி இந்நகராட்சியின் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கான பட்டியலில் (BPL) திருமதி.சபரிபிரியா க/பெ திரு.விவேகானந்தன் (லேட்), 1/1A தென்வடல் வீதி, புன்செய்ப் புளியம்பட்டி என்னும் பெயரை சேர்த்துக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1180/2022/எச்1)**

**அலுவலகக்குறிப்பு**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.4**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக ஆறு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், இப்பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் 01.12.2022 முதல் 31.12.2022 வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 31.12.2022 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.01.2023 முதல் 31.01.2023 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க. எண்.387/2017/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.5**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வாயிலாக திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர் மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்று நோய் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை தொடர்ந்து 01.01.2023 முதல் 31.01.2023 வரை திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.447/2017/எச்1)**

**அலுவலகக்குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்.6**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 6 வார்டுகளில் 41 தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4861/P3/2018 நாள்.28.02.2018 அனுமதியின் படி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.06.06.2019ன் படி பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.30.06.2019ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.04.2022 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஒரு மாதம் (01.12.2022 முதல் 31.12.2022 வரை) பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் ஒரு மாதம் (01.01.2023 முதல் 31.01.2023 வரை) விபிஎன் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரர் அவர்களை பணி செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.25/2016/எச்1)**
**அலுவலகக்குறிப்பு :—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்.7**

நகராட்சி நிர்வாக இயக்குர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.11135/2022/எம்3 நாள்.19.05.2022ன் படி ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு ஸ்கார்பியோ வாகனம் ஒன்று அதன் விலை ரூ.16,82,000/— மதிப்பீட்டிலும், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு பொலிரோ வாகனம் ஒன்று அதன் விலை ரூ.8,27,742/— மதிப்பீட்டிலும் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட (GEM Rate) விலைக்கு மிகாமல் விதிகளுக்குட்பட்டு வாகனம் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு ஈப்பு வாகனங்களை பொது நிதியிலிருந்து வாங்கிக்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.125 நாள்.30.08.2022ஆம் தேதியன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதி தெருக்களில் உள்ள சாலைகள் 3மீட்டர் மற்றும் அதற்கு குறைவான அகலத்திலேயே உள்ளதால் ஸ்கார்பியோ வாகனத்தில் சென்று ஆய்வு செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே மேற்படி ஸ்கார்பியோ வாகனத்திற்கு பதிலாக அரசு நிர்ணயம் செய்த விலைக்கே (GEM Rate) பொலிரோ வாகனம் ஒன்று வாங்கிகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.ண்.685/2022/இ1)**
**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.8**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு எதிராக திரு.T.கணேசன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கிற்கு (வழக்கு எண்.O.S.No.135/2022) வழக்கு கட்டணம் ரூ.15,000/— திரு.R.நடராஜன், வழக்கறிஞர் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1387/2022/அ1)**
**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.9</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு எதிராக திரு.கரிவரததாஜன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கிற்கு (வழக்கு எண்.W.P.No.27534/2021) வழக்கு கட்டணம் ரூ.20,000/– திரு.V.மனோகரன், கூடுதல் அரசு வழக்கறிஞர், சென்னை அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 609/2021/எப்1)**

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.10</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகாட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட விவரப்படி உள்ள குத்தகை இனத்தின் ஒப்பந்த காலம் 31.03.2023 உடன் முடிவடைவதால், இக்குத்தகை இனத்தை 01.04.2023 முதல் 31.03.2026 வரை உள்ள 3 ஆண்டு காலத்திற்கு ஒப்படைக்க, பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| வ.எண் | உரிமத்தின் விபரம் | ஊரிமம் ஒப்படைக்கப்படும் காலம் | செலுத்தவேண்டிய வைப்புத்தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | நகராட்சி நவீன ஆடுவதை கூடத்தில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் | 01.04.2023 முதல் 31.03.2026 வரை | ரூ.25000/– |

**(ந.க.எண்.2173/2022/அ1)**

அலுவலகக்குறிப்பு :–

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை அவர்களின் அரசாணை (நிலை) எண்.181 நாள்.19.09.2008–ன் படி மேற்கண்ட குத்தகை உரிமம் இனம் 01.04.2023 முதல் 31.03.2026 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ள பொது ஏலமிட மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2015–2016 முதல் 2017–2018–ம் ஆண்டிற்கான தயாரிக்கப்பட்ட பொது ஏல நிபந்தனை சிறப்பு மற்றும் த நிபந்தனைகளின் படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
3. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கான செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.11**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை அரசு ஆணை (நிலை) எண்.92, நாள்.03.07.2007ன்படி, இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட விவரப்படி உள்ள கடைகளுக்கு 11.11.2022 ஆம் தேதியன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

நகராட்சியின் தொடர் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டும், தற்போது உலகையே உலுக்கி வரும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை காரணமாக, பொது மக்களிடம் பணப்புழக்கம் இல்லாத காரணத்தினாலும், உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி மற்றும் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள, கீழ்கண்ட விவரப்படி உள்ள நபர்களுக்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு ஆணை எண்.92 நாள்.03.07.2007–ன்படி மற்றும் ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு கடையினை ஒப்படைக்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்டவர்கள் பெயர்கள் | மாத வாடகையாக ஏலம் கோரிய தொகை | மாத வாடகையாக மறு ஏலத்தில் உயர்ந்த கேள்வியாக கோரியது ரூ. | மாத வாடகையாக ஒப்பந்தப் புள்ளித் தொகை ரூ. | மாத வாடகையாக உயர்ந்தபட்ச ஒப்பந்தப் புள்ளி விவரம் ரூ. | எத்தனை யாவது ஏலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஜவஹர் மெயின் ரோடு கடை எண்.20, அரசு மதிப்பு ரூ.36,369/– | | | | | |
| | ஏ. மோகனசுந்தரம் | ஏலம் எவரும் கோரவில்லை | | | | 9வது ஏலம் |
| | எஸ். சரவணக்குமார் | | | | | |
| | சக்திவேல் முருகன் | | | | | |
| | எம். கே. ராமசாமி | | | | | |
| | எஸ். சரவணக்குமார் | | | | 39,333/– | |
| | பி. எம். செல்வராஜ் | | | 37,333/– | | |
| | ஏ. மோகனசுந்தரம் | | | 19,000/– | | |
| 2 | ஜவஹர் மெயின் ரோடு கடை எண்.23, அரசு மதிப்பு ரூ.17,250/– | | | | | |
| | எம். மாதையன் | | 17450/– | ஒப்பந்தப் புள்ளி எவரும் கோரவில்லை | | 9வது ஏலம் |
| | எம். சற்குணம் | 17,350/– | | | | |
| 3 | ஜவஹர் மெயின் ரோடு கடை எண்.25, அரசு மதிப்பு ரூ.14,663/– | | | | | |
| | ஸ்ரீகிருஷ்ணன் | ஏலம் கோரவில்லை | ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டார். | ஒப்பந்தப் புள்ளி எவரும் கோரவில்லை | | 9வது ஏலம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **4** | **ஜவஹர் மெயின் ரோடு கடை எண்.26, அரசு மதிப்பு ரூ.12,000/–** | | | | | |
| | சக்திவேல் முருகன் | ஏலம் கோரவில்லை | | ஒப்பந்தப் புள்ளி எவரும் கோரவில்லை | | 41வது ஏலம் |
| | ஜோசப் அந்தோணி | 12,100/– | | | | |
| | செல்வகுமார் | | 12,200/– | | | |
| **5** | **ஜவஹர் மெயின் ரோடு கடை எண்.28, அரசு மதிப்பு ரூ.12,000/–** | | | | | |
| | எஸ். வினோத் | | 12,200/– | ஒப்பந்தப் புள்ளி எவரும் கோரவில்லை | | 41வது ஏலம் |
| | ஜே.அயூப் | 12,100/– | | | | |
| **6** | **எம்.ஜி.ஆர். வணிக வளாக கடை எண்.8 அரசு மதிப்பு ரூ.33,195/–** | | | | | |
| | ஜி. வேலுச்சாமி | ஏலம் எவரும் கோரவில்லை | | 33,600/– | | 9வது ஏலம் |
| | வி. சித்தார்த் | | | | 34,200/– | |
| **7** | **எம்.ஜி.ஆர். வணிக வளாக கடை எண்.14 அரசு மதிப்பு ரூ.26,450/–** | | | | | |
| | ஏ. கனகராஜ் | ஏலம் கோரவில்லை | | ஒப்பந்தப் புள்ளி எவரும் கோரவில்லை | | 9வது ஏலம் |
| **8** | **பேருந்து நிலைய கடை எண்.6 அரசு மதிப்பு ரூ.10,005/–** | | | | | |
| | ஜி. தினேஷ்குமார் | | 10,100/– | ஒப்பந்தப் புள்ளி எவரும் கோரவில்லை | | 9வது ஏலம் |
| | கே. சுரேஷ் | 10,000/– | | | | |
| **9** | **பேருந்து நிலைய கடை எண்.16 அரசு மதிப்பு ரூ.21,954/–** | | | | | |
| | வளன்அரசு | 12,000/– | | ஒப்பந்தப் புள்ளி எவரும் கோரவில்லை | | 9வது ஏலம் |

**(ந.க.எண்.785/2021/அ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்படி வரிசை எண்.01 முதல் 09 வரையுள்ள கடைகளுக்கு தொடர்ந்து மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் நடத்தப்பட்டு வந்ததில் எவரும் கலந்துகொள்ள முன்வரவில்லை. இந்நிலையில் கடந்த **11.11.2022**ஆம் தேதியன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் மேற்கண்ட வரிசை எண்.01, 02, 04, 05, 06 மற்றும் 08 ஆகிய 6

கடைகளுக்கு தற்போது மறு ஏலத்தில் ஏலதாரர் கேட்டுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை மற்றும் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளித்தொகை அரசு மதிப்பிற்கு குறையாமல் உள்ளதாலும், மேலும் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை தவிர்க்கவும் மேற்கண்ட 6 கடைகளின் ஏலதாரருக்கு ஏல உரிமம் வழங்கலாம்.

2) மேலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
3) மேலும் மேற்கண்ட வரிசை எண்.3 மற்றும் 7 ஆகிய இண்டு கடைகளுக்கு ஏலம் கோர எவரும் முன்வரவில்லை மற்றும் வரிசை எண்.9ல் உள்ள கடைக்கு அரசு மதிப்பை விட குறைவாக கோரியுள்ளதாலும், மீதமுள்ள 14 கடைகளுக்கு ஏலம் கோர எவரும் முன்வராததால், 17 கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

<u>பொருள் எண்.12</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் 2021–2022–ஆம் ஆண்டுக்குரிய இயல்புநிலை கணக்குகளான வருவாய் மற்றும் மூலதன நிதி மற்றும் குடிநீர்நிதி கணக்கு முடிக்க அதன் துணை பதிவேடுகள், சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குத்தகை இனம், அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க பதிவேடு (D & O) ஆக்கிரமிப்பு கட்டணம் முன்பண பதிவேடு மற்றும் வைப்புத் தொகை பதிவேடுகளின் கணக்குகளை முடித்து, மேற்கண்ட கணக்குகளின் இருப்புகளை ஆண்டு கணக்குகளுடன் ஒப்பீடு செய்தும், நகராட்சியில் பராமரிக்கப்படும் செலவின பதிவேடுகள் மற்றும் வங்கி கைச்சாத்து புத்தகத்துடன் இணக்கம் செய்து கணக்குகளை Sanjey Solutions, கொமாரபாளையம் திரு.அழகர்சாமி என்பவர் முடித்து கொடுத்துள்ளார்.

எனவே, மேற்படி 2021–2022ம் ஆண்டு கணக்குகளை முடித்து, மூன்று நகல் எடுத்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரின் ஒப்புதல் பெற்று, நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.75,000/–க்கு பட்டியல் தொகை வழங்க கோரியுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.2189/2022/அ1)**
**அலுவலகக் குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.13</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் 2022–2023–ஆம் ஆண்டுக்குரிய இயல்புநிலை கணக்குகளான வருவாய் மற்றும் மூலதன நிதி மற்றும் குடிநீர்நிதி கணக்கு முடிக்க அதன் துணை பதிவேடுகள், சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குத்தகை இனம், அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க பதிவேடு (D & O) ஆக்கிரமிப்பு கட்டணம் முன்பண பதிவேடு மற்றும் வைப்புத் தொகை பதிவேடுகளின் கணக்குகளை முடித்து, மேற்கண்ட கணக்குகளின் இருப்புகளை ஆண்டு கணக்குகளுடன் ஒப்பீடு செய்தும், நகராட்சியில் பராமரிக்கப்படும் செலவின பதிவேடுகள் மற்றும் வங்கி கைச்சாத்து புத்தகத்துடன் இணக்கம் செய்து கணக்குகளை Sanjey Solutions, கொமாரபாளையம் திரு.அழகர்சாமி என்பவர் முடித்து கொடுத்துள்ளார்.

எனவே, மேற்படி 2022–2023ம் ஆண்டு கணக்குகளை முடித்து, மூன்று நகல் எடுத்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரின் ஒப்புதல் பெற்று, நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யவும், அதற்கான செலவினம் ரூ.75,000/–க்கு பட்டியல் தொகை வழங்க கோரியுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.2189/2022/அ1)**

**அலுவலகக் குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.14</u>**

புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண். 16 காயிதே மில்லத் தெருவில் உள்ள தச்சுப்பட்டறை கட்டிடங்கள் பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்துள்ளது. பவானிசாகர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களின் உத்திரவு ந.க.எண். 2073/2019/அ2 நாள் 10.10.2019 –ன் கடிதத்தின்படி புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே ஏற்கனவே உள்ள அதற்கான சொத்துவரித் தொகை மற்றும் சொத்துவரி விதிப்பு எண்கள் ஆகியவற்றை கீழ்க்கண்டவாறு விதிக்கப்பட்டுள்ளதை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்காகவும் ஒப்புதலுக்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | கதவு எண்கள் | பெயர் | சொத்துவரி விதிப்பு எண்கள் | 2019–2020 | 2020–2021 | 2021–2022 | 2022–2023 | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 72 | ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம் | 060/016/900005 | 3406 | 6214 | 6214 | 9022 | 24856 |
| 2 | 73 | ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம் | 060/016/900006 | 1556 | 2754 | 2754 | 3952 | 11016 |
| | | | **மொத்தம்** | | | | | **35872** |

**(ந.க.எண். 1628/2019/எப்1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**<u>பொருள் எண்.15</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.15ல் வாரச்சந்தை வளாகத்திற்குள் செயல்பட்டு வரும் நகராட்சிக்கு சொந்தமான நவீன ஆடுவதை கூடம் கட்டப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. எனவே மேற்கண்ட நவீன ஆடுவதை கூடத்தினை பழுது நீக்கம், வர்ணம் பூசுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2143/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.16**

பவானிசாகர் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் அவகளின் கடித ந.க.எண்.10/2022 நாள்.18.05.2022–ன் படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் குழந்தைகள் அங்கன்வாடி மையம் அமைத்திட இடம் தேர்வு செய்து வழங்குமாறு கோரியுள்ளனர். ஆதனடிப்படையில் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதி சர்வே எண்.46/1–ல் 3.00சென்ட் அளவுள்ள இடம் ஒதுக்கீடு செய்தும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உரிய அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.            /2022/எப்1)**

**அலுவலகக்குறிப்பு** :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.17**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கே.வி.கே அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் கெம்பண்ணா ஒதிமலை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய இரண்டு அரசு மேல்நிலைப்பள்ளிகள் இயங்கி வருகிறது. இந்த இரண்டு பள்ளிகளில் சுமார் 2000 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இந்நிலையில் மேற்படி இரண்டு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களின்கோரிக்கைக்கினங்கவும், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் தலைவர் மற்றும் உறுப்பினர்களிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர். மேற்படி பள்ளி கட்டிடத்திற்கு குடிநீர் கட்டண நிலுவைத்தொகையை செலுத்தியபின் மேற்படி பள்ளிகளில் உள்ள மாணவ, மாணவிகளின் நலன் கருதி வரும் 2023–24ஆம் நிதியாண்டு முதல் இலவசமாக குடிநீர் வழங்குவதற்கான பிரேரணையை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1907/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.18**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் 2021-2022–ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2100 /2022/சி1)**

**அலுவலகக் குறிப்பு:–**

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.19**

இந்நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி மற்றும் குடிநீர் நிதிக்கான 2022–23–ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு திட்டம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2138/2022/அ1)**

**அலுவலகக் குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**இப்படிக்கு**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**